DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 1099 /2023 |
| Witness: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | லட்சுமி ஸ்ரீதர் |
| **Father' Name** | ~ | ஸ்ரீதர் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 29.05.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பம்மல் பகுதியில் வசித்து வருகிறேன். நான் ஆடிட்டராக பணியாற்றி வருகிறேன். எனக்கு சொந்தமான பம்மல் வ.உ.சி நகர் பகுதியில் உள்ள வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு உள்ளதாக கடந்த 2023 ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தேதி நினைவில்லை. எனது வீட்டில் குடியிருந்து நிரஞ்சன் என்பவர் எனக்கு தகவல் தெரிவித்தார். நான் நேரில் வந்து பார்த்தபோது எனது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த பீரோ உடைக்கப்பட்டு இருந்தது. எனக்கு சொந்தமான 10 சவரன் தங்க நகைகளும் எனது அம்மாவின் மருத்துவ செலவுக்கு வைத்திருந்த ரூ.10,00,000 பணமும் திருடு போய் இருந்தது தெரிய வந்தது. அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள

கையொப்பம் என்னுடையது. புகார் மனு அ.சா.ஆ.1. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 7 சவரன் தங்க நகைகள் மற்றும் எனது வீட்டிலிருந்து திருடப்பட்ட ரூ.1,00,000 பணத்தையும், splender இரு சக்கர வாகனத்தையும் கைப்பற்றி விட்டதாக தகவல் தெரிவித்தார்கள். நான் நீதிமன்றத்தில் மனு செய்து 7 சவரன் தங்க நகைகளை பெற்று சென்றேன். என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் தங்க நகைகளை நான் நீதிமன்றத்தில் இருந்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். 7 சவரன் தங்க நகைள் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எதிரியிடம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அறிவுறுத்தியும் எதிரி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என சாட்சியம் முடிக்கப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.